# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2008 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, தெகிவளை, நெதிமாலை பௌத்த கலாசார நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

(2008 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 7 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2008, ஓகத்து மாதம் 8 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

விலை: ரூபா 12.00 தபாற் செலவு: ரூபா 5.00

# 2008 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, தெகிவளை, நெதிமாலை பௌத்த கலாசார நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2008 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 7 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப் பட்டது.]

ச.வ.ஓ. கூட்டி. 1/2006

## தெகிவளை, நெதிமாலை பௌத்த கலாசார நிலையத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

''தெகிவளை, நெதிமாலை பௌத்த கலாசார நிலையம்'' என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான நிலையம் ஒன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக் கிணங்கச் சொல்லப்பட்ட நிலையத்துடன் தொடர்புடைய எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்காக இதற்கு முன்னர் தெகிவளை, நெதிமாலையில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன், சொல்லப்பட்ட நிலையமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப் பட்டதோ அந்தப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அத்துடன் அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும் அவ்விண்ணப்பத்தை அனு மதித்தல் பொது மக்களின் நன்மைக்காக இருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தி னால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம், 2008 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, தெகிவளை, நெதிமாலை பௌத்த கலாசார நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

தெகிவளை நெதிமாலை பௌத்த கலாசார நிலையத்தைக் கூட்டிணைத்தல்.

2. இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் ''நிலையம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) தெகிவளை, நெதிமாலை பௌத்த கலாசார நிலையத்தின் தற் போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களான அல்லது இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களான அத்தகைய அத்தனை ஆட்களும் ''தெகிவளை, நெதிமாலை பௌத்த கலாசார நிலையம்'' என்ற பெயர் மகுடத்தின் கீழ் (இதனகத்துப் பின்னர் ''கூட்டுத்தாபனம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்)

2 –PL 002974– 1,075 (2008/05)

இடையறாவழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாக விருத்தல் வேண்டும். அத்துடன் அது அப்பெயர் கொண்டு வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன், பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :—

(அ) பௌத்த மத நூல்களையும் பௌத்தமதம் பற்றிய சஞ்சிகைகளையும் அவர்களிடையே விநியோகிப்பதன் மூலம் நற்பண்பு கொண்டதும் ஒழுக்கக்கட்டுப்பாடுள்ளதுமான பௌத்த சமூகமொன்றை உருவாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளலும் ;

(ஆ) பௌத்தர்களுக்கு தியான முறைகளில் பயிற்சி மேற்கொள்வதற்குத் தேவையான வசதிகளை வழங்குதலும் ;

(இ) உலகம் பூராவும் வெளியாகும் எல்லா பௌத்த நூல்கள் மற்றும் சஞ்சிகைகளை சேகரித்தலும் பேணிக்காத்தலும் மற்றும் பௌத்தர்கள் அவற்றை இலகுவில் பெற்றுக் கொள்வதற்கான வசதிகளைச் செய்தலும் ;

(ஈ) தற்போது அச்சில் இல்லாத புராதன பௌத்த இலக்கியங்களை அச்சிடுதலும் அத்தகைய இலக்கியங்களை வேறு மொழிகளில் மொழிபெயர்த்தலும் ;

(உ) பௌத்தர்களின் நலன்கருதி தற்போதுள்ள கிளைகளை விசாலித்தலும் ;

(ஊ) பௌத்தமத நூல்களை அச்சிடுவதற்கு மாத்திரம் அச்சகம் ஒன்றை நிறுவுதலும் ;

(எ) மேலதிகமாக பௌத்தமத அறிவைப் பெற விரும்புகின்ற அனைவரதும் வசதி கருதி தபால்மூல பௌத்தமத பாடக் கற்கை நெறியொன்றைத் தொடக்கி வைத்தலும் ;

(ஏ) புத்த ஜயந்தி திரிபிடகத் தொகுதியை மீள அச்சிடுதலும்;

(ஐ) குறைந்த வருமானமுள்ள பிரிவைச் சேர்ந்த பௌத்த சிறுவர்களுக்கு ஆரம்பநிலைப் பாடசாலைகளைத் தாபித்தலும் பேணுதலும் ;

(ஒ) குறைந்த வருமானமுள்ள பௌத்தமதக் குடும்பங்களின் பிரிவைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஆரம்பக் கல்வியிலிருந்து பல்கலைக்கழகக் கல்விவரை கல்வி மற்றும் கலாசார நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு அவசியமான நூல்கள், சஞ்சிகைகள் மற்றும் கல்விசார்ந்த உபகரணங்களை வழங்குதலும், அவர்களுக்கு பண உதவி வழங்குதலும் மற்றும் புலமைப் பரிசில்களை அளித்தலும் ;

(ஓ) பௌத்தமதப் பல்கலைக்கழக மாணவர்கள் கல்வி, கலாசார, நுண்ணாய்வு மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அவசியமான உதவிகளை வழங்குதலும் புலமைப் பரிசில்களை அளித்தலும் ;

(ஔ) பௌத்த மதத்திலும் பௌத்த கலாசாரத்திலும் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு வெளிநாட்டு அறிஞர்களுக்கு அவசியமான வசதிகளையும் உதவிகளையும் வழங்குதலும் ;

(க) பௌத்த தகவல் மற்றும் வெளியீட்டு நிலையமொன்றையும் வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன் பௌத்தமதம் பற்றிய நூல்களின் விற்பனை நிலையமொன்றையும் நிறுவுதலும் ;

(ங) நிலையத்திற்கும் சமூக சேவையாளர்கள், கல்விமான்கள் மற்றும் கொடையாளிகள் ஆகியோருக்கிடையிலும் ஏனைய நாடுகளிலுள்ள இதனையொத்த நலன்புரிச் சங்கங்கள், ஒழுங்கமைப்புகள் மற்றும் மன்றங்கள் ஆகியவற்றுடனும் நட்புறவை விருத்திசெய்தலும் ;

(ச) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஊக்குவிப்பதற்கும் விருத்தி செய்வதற்கும் பொருத்தமானதென கூட்டுத்தாபனம் கருதும் நூல்கள், வெளியீடுகள், பத்திரிகைகள், புதினத் தாள்கள் மற்றும் சஞ்சிகைகள் போன்றவற்றை அச்சிடுதலும் வெளியிடுதலும், விநியோகித்தலும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

4. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், தலைவர், துணைத் தலைவர், பிரதம செயலாளர், துணைச் செயலாளர்கள், பொருளாளர், துணைப் பொருளாளர் மற்றும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய தெரிவு செய்யப்பட்ட வேறு ஐந்து உறுப்பினர் ஆகியோரைக் கொண்ட முகாமைச்சபையொன்றினால் (இதனகத்துப் பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கும் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட அத்தகைய கூட்டுத்தாபனத்தின் விதிகளிற்கும் அமைய நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது சபை இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முந்திய நாளன்று பதவி வகிக்கும் நிலையத்தின் சபை உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

உறுப்பாண்மை, இடாப்பு.

5. (1) சபையானது உறுப்பினர்களின் இடாப்பொன்றை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும். அதில் இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முந்திய நாளன்று நிலையத்தின் உறுப்பினராகவிருக்கும் ஒவ்வோராளும் அத்துடன் அதன் பின்னர் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளப்படும் ஒவ்வொராளும் அவரது பெயரை எழுதுவித்தல் வேண்டும்.

(2) இடாப்பானது பின்வரும் விபரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(அ) கூட்டுத்தாபனத்தின் ஒவ்வொரு உறுப்பினரதும் பெயர், விலாசம் மற்றும் வாழ்க்கைத்தொழில் ;

(ஆ) இடாப்பில் உறுப்பினரின் பெயர் எழுதப்பட்ட தேதி ;

(இ) எவரேனும் ஆள் எத்தேதியன்று கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரொருவராக இல்லாதொழிந்தாரோ அத் தேதி.

6. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனம் — கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப்படக்கூடிய காணிகளை அல்லது கட்டிடங்களைக் கொள்வனவு செய்வதற்கும், கொள்வதற்கும், வாடகைக்கு எடுப்பதற்கும் நிறுவுவதற்கும் அல்லது வேறுவகையில் பெறுவதற்கும் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக அரசாங்க அங்கீகாரம் பெற்ற வங்கிகள், நிறுவனங்கள் என்பவற்றிலிருந்து கடன்களைப் பெறுவதற்கு அல்லது பணம் திரட்டுவதற்கு ;

(இ) செலாவணி உண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிப் பத்திரங்கள் அத்துடன் ஏனைய கொடுத்து மாற்றத்தகு சாதனங்கள் என்பவற்றைத் தயாரிக்கவும், வரையவும், கையேற்கவும், கழிவுகளை வழங்கவும், புறக்குறிப்பு செய்யவும், கொடுத்து மாற்றவும், கொள்வனவு செய்யவும், விற்பனை செய்யவும், வழங்கவும், வங்கிக் கணக்குகளை ஆரம்பிக்கவும், செயற்படுத்தவும் பேணவும் முடிவுறுத்தவும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளை சபை பொருத்தமெனக் கருதுகின்றவாறான அத்தகைய முறையில் முதலீடு செய்வதற்கும் ;

(உ) ஒப்பப்பணம், மானியக்கொடைகள், நன்கொடைகள் அல்லது எல்லா வகையிலுமான அன்பளிப்புகளைப் பரிந்து கேட்கவும் கையேற்கவும் ;

(ஊ) எவரேனும் ஆளுடன், ஏதேனும் கம்பெனியுடன் அல்லது ஆட்கள் குழுவுடன் உடன்படிக்கைகளை அல்லது ஒப்பந்தங்களைச் செய்யவும் ;

(எ) ஏதேனும் அசைவுள்ள ஆதனத்திற்கு அல்லது அசைவற்ற ஆதனத்திற்கு ஏற்புடைய சட்டபூர்வமான நம்பிக்கைப் பொறுப்புக்களையும் நிபந்தனைகளையும் பொறுப்பேற்கவும், ஏற்றுக்கொள்ளவும், நிறைவேற்றவும், நடைமுறைப்படுத்தவும் நிருவகிக்கவும் ;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களையும், சேவையாளர்களையும், நியமனஞ் செய்யவும், தொழிலுக்கமர்த்தவும், பதவி நீக்கஞ் செய்யவும், அவர்களின் சேவையை முடிவுறுத்தவும், கூட்டுத்தாபனத்தால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சம்பளங்கள், படிகள் மற்றும் பணிக்கொடைகள் என்பவற்றைக் கொடுப்பனவு செய்யவும் ; அத்துடன்

(ஐ) கூட்டுத்தாபனத்தின் நோக்கத்திற்காக ஆளணியினரை இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் பயிற்றுவிக்கவும் ;

தத்துவமுடையதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

7. (1) கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டிற்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மை கொண்டு பின்வரும் எல்லாக் கருமங்களுக்காகவும் அல்லது அவற்றில் ஏதேனுமொன்றிற்காக இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தல், ஒவ்வொரு வகுப்பினையும் சேர்ந்த உறுப்பினராலும் செலுத்தப்படற்பாலதான கட்டணங்கள், உறுப்பினர்களைச் சேர்த்தல், அவர்களை விலக்குதல், அகற்றுதல் அல்லது அவர்கள் பதவி விலகுதல் ;

(ஆ) சபையைத் தேர்ந்தெடுத்தல், பதவிதாங்குநர்கள் பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் அத்துடன் அவர்களது தத்துவங்கள், கடமைகள், நடத்தையை குறித்தொதுக்குதலும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரின் நியமனமும் அவர்களைத் தொழிலுக்கமர்த்தலும் மற்றும் அவர்களை பதவி நீக்கஞ்செய்தலும் அத்துடன் அவர்களது

தத்துவங்கள், கடமைகள், பணிகள், நடத்தையை குறித் தொதுக்குதலும் மற்றும் அவர்களுக்கு ஊதிய மளித்தலும் ;

(ஈ) சபையின் கூட்டுத்தாபனத்தின் அல்லது அதன் ஏதேனும் உபகுழுவின் கூட்டங்களைக் கூட்டும் போதும் நடத்தும்போதும் வெற்றிடங்களை நிரப்புதல், அத்தகைய கூட்டங்கள் பற்றிய அறிவித்தல்கள், நிகழ்ச்சிநிரல்கள், கூட்டநடப்பெண், அவற்றின் அலுவல்களை நிறைவேற்றுதல் என்பவற்றின்போதும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை ;

(உ) சபையினதும் கூட்டுத்தாபனத்தினதும் உறுப்பாண் மைக்கான தகைமைகளும் தகைமையீனங்களும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமை செய்தலும் ;

(எ) பொதுவில் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்தலும் அதன் குறிக்கோள்களை எய்துத லும்.

(2) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

8. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டி ருத்தல் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

(2) கூட்டுத்தாபனத்துக்கு அன்பளிப்பு, இறுதி விருப்பாவணக் கையளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக் கொடைகள் என்றவகையாகக் கிடைக்கப்பெற்ற எல்லாப் பணங்களும் சபை தீர்மானிக்கும் ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத் தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனம் இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களை யும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிக்கையிலும் நிறை வேற்றுகையிலும் புரிகையிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட

ஏதேனும் செலவினத்தை ஈடுசெய்வதற்குத் தேவைப்படக்கூடிய வாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

நிலையத்தினால் செலுத்தப் படவுள்ளனவும் நிலையத்திற்குச் செலுத்தப்பட வுள்ளனவுமான கடன்கள்.

**9.** இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று நிலையத்துக்குரிய எல்லாத் தனிசுகளும் பொறுப்புக் களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும் கொடுத்துத் தீர்க்கப்படுதலும் வேண்டு மென்பதுடன், அந்நாளன்று நிலையத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் நிலையத்தால் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும், உதவு தொகைகளும் இச்சட்டத்தின் நோக்கத் திற்காகக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

நிதியாண்டு.

**10.** கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

**11.** (1) கூட்டுத்தாபனத்திற்குக் கிடைக்கப்பெற்றவையும் கூட்டுத்தாபனத்தால் செலவு செய்யப்பட்டவையுமான பணங்கள் பற்றிய முறையான கணக்குகளைக் கூட்டுத்தாபனம் வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் ஆண்டு இறுதிக் கணக்குகள் ஒவ்வோராண்டும் பரிசீலனை செய்யப்பட்டு கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வாளரால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் அறிக்கைகள் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக் கப்படுதலும் வேண்டும்.

கலைக்கப்பட்ட தன்மேல் எஞ்சியிருக்கும் ஆதனம்.

**12.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன் மேல், அதன் எல்லாத் தனிசுகளும் பொறுப்புக்களும் கொடுத்துத் தீர்க்கப்பட்ட பின்னர் எத்தன்மைத்தான ஆதனம் எதுவும் எஞ்சியிருந்தால், அத்தகைய ஆதனமானது, கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது ; ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களை உடையதும் அல்லது உடையனவும், அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டுள்ளதுமான அல்லது தடைசெய்யப்பட்டுள்ள வையுமான வேறு கழகத்திற்கு அல்லது கழகங்களுக்குக் கொடுக்

கப்படுதல் வேண்டும் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவனங்கள், கூட்டுத்தாபனம் கலைக்கப்படும் நேரத்தில் அல்லது அதற்கு நேர்முன்னர் கூட்டுத்தாபன உறுப்பினர்களால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**13.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினை தவிசாளரின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும் என்பதுடன் கூட்டுத்தாபனத்தின் தவிசாளரினதும் செயலாளரினதும் முன்னிலையில் தவிர சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது. இவர்கள் தாங்கள் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாகத் தங்கள் பெயர்களை எழுதி சாசனத்தில் கையொப்பமிடுதல் வேண்டும். அவ்வாறு கையொப்பமிடுதலானது ஆளெவரும் சாட்சியொருவராக ஒப்பமிடுவதினின்று தனிவேறானதாதல் வேண்டும்.

குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.

**14.** இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும் இலங்கைக் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக் கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும், பங்கப்படுத்துதலாகாது அல்லது பாதிப்பதாதலாகாது.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**15.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்